உ

செந்திலாண்டவன் துணை

திருவாசகப் பழமொழிகள்

[G. U. போப் ஆங்கிலமும் கூடியது]

*

ஸ்ரீ-ல-ஸ்ரீ காசிவாசி சாமிநாத சுவாமிகள்

10-ஆம் ஆண்டு நினைவு வெளியீடு

1292

*

—4—1954

ஸ்ரீ காசிமடம் : : திருப்பனந்தாள்

திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடத்து வெளியீடுகள்

		ரூ.	அ.
1	விநாயகர் திருமுறை	0	1
2	ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் பிரபந்தத் திரட்டு - டாக்டர் உ. வே. சாமிநாத ஐயர் குறிப்புரையுடன் ...	6	0
3	திருஞான சம்பந்தர் தேவாரம் ...	2	8
4	திருநாவுக்கரசர் தேவாரம் ...	1	0
5	சுந்தரர் தேவாரம் ...	1	0
6	திருவாசகம் ...	0	6
7	திருக்கோவையார் - பேராசிரியர் உரை	2	0
8	ஒன்பதாம் திருமுறை - திருவிசைப்பா, திருப்பல்லாண்டு ...	0	9
9	திருமந்திரம் ...	1	8
10	பதினோராந் திருமுறை ...	1	4
11	அம்மையார் - அற்புதத் திருவந்தாதி...	0	4
12	திருக்கைலாய ஞானவுலா ...	0	8
13	பெரிய புராணம் ...	2	8
14	அகத்தியர் தேவாரத்திரட்டு குறிப்புரை	0	6
15	திருவிளையாடற் புராணம் ,, ...	3	0
16	தாயுமான சுவாமிகள் பாடல் ,, ...	1	4
17	கந்தபுராணச் சுருக்கம் ,, ...	1	12
18	கந்தபுராணம் - முதல் மூன்று காண்டங்கள் ஆராய்ச்சிக் குறிப்புடன் ...	2	12
19	ஷை யுத்தகாண்டம், தேவகாண்டங்கள் ஆராய்ச்சிக் குறிப்புடன் ...	1	12
20	ஷை தக்ஷகாண்டம் - குறிப்புரை - ஆராய்ச்சிக் குறிப்புடன் ...	1	8
21	கந்தர் அலங்காரம் குறிப்புரை ...	0	4
22	கந்தர் அனுபூதி ஷை ...	0	2

திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடத்து இலவச வெளியீடு

உ

செந்திலாண்டவன் துணை

1293

ருவாசகப் பழமொழிகள்

[G. U. போப் ஆங்கிலமும் கூடியது]

*

ருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடத்துத் தலைவர்

ஸ்ரீ காசிவாசி அருள்நந்தித் தம்பிரான் சுவாமிகள்

அவர்களுடைய ஆணையின் வண்ணம்

*

ருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடம் ஜூனியர்

ஸ்ரீமத் மகாலிங்கத் தம்பிரான் சுவாமிகள்

அவர்களால் வெளியிடப்பெற்றது

*

பதிப்பாசிரியர் :

வான் கே. எம். வேங்கடராமையா M. A., B. O. L.,

பிரின்ஸிபால், செந்தமிழ்க் கல்லூரி,

திருப்பனந்தாள்.

விஜய, பங்குனி

RAJAH SERFOGI'S SARASWATHI MAHAL LIBRARY
SARASVATI MAHAL

உ

சிவ சிவ

திருவாசகச் சிறப்பு

—o—

போதலர்ந்து தேன்சொரியும் பொன்னம் பலத்திலுறை
வாதவூர் எங்கோமான் வாசகத்தை - ஓதிப்
பிறவிப் பிணிநீக்கிப் பேரின்ப வெள்ளச்
செறிவுக்குள் செல்வர் சிறந்து.

— பழைய பாடல்

உ

செந்திலாண்டவன் துணை

1293

முகவுரை

—oo—

பழமொழிகள் மக்களது மனப் பண்பினைக் காட்டும் கண்ணாடிகள்; அவர்களுடைய வாழ்வியலைச் சித்தரித்து வெளிப்படுத்தும் எழுத்தோவியங்கள்; கற்றோர் கேட்டோர் உள்ளத்தைக் கொள்ளைகொள்ளும் சொற்சித்திரங்கள்.

"பழமொழி நானூறு" என்னும் நூல் பதினெண்கீழ்க் கணக்கு நூல்களில் ஒன்று. வாதவூர் அடிகளும் திருவெம்பாவையில் 'பழமொழி'யைப் '**பழஞ்சொல்**' என்று குறிப்பர்.

திருநாவுக்கரசு சுவாமிகள் ஒரு திருப்பதிகம் முழுவதிலும் பழமொழிகளை எடுத்தாண்டுள்ளார். பன்னிரண்டு திருமுறைகளிலும் பல பழமொழிகள் வந்துள்ளன. அவற்றுள் திருவாசகத்தில் பழமொழிகள் உள்ள பாடல்களிற் பெரும்பாலன தொகுக்கப் பெற்றுக் குறிப்புரையுடனும் திரு. G. U. போப் அவர்கள் எழுதிய ஆங்கில மொழி பெயர்ப்புடனும் **"திருவாசகப் பழமொழிகள்"**

என்ற பெயருடன் **ஸ்ரீ-ல-ஸ்ரீ காசிவாசி சாமிநாத சுவாமிகள் அவர்களுடைய 10-வது ஆண்டு நினைவு நாள் இலவச வெளியீடாக** வருகின்றது. திருவாசக நேயர்கள் இதனைப் படித்துப் பயன்பெறுவார்களாக!

சைவத்தோடு செந்தமிழையும் பேணிப் பல நல்லறங்களை நாளும் செய்துவரும் எங்கள் தலைவர் **ஸ்ரீ-ல-ஸ்ரீ காசிவாசி அருள்நந்தித் தம்பிரான் சுவாமிகள் அவர்கள்** இச்சிவப் பணியை அடியேனுக்கு அளித்தருளினார்கள். அவர்கள் திருவடிகளுக்கு மன மொழி மெய்களோடு கூடிய வணக்கத்தை செலுத்திக்கொள்கிறேன்.

இப்பதிப்பு நன்முறையில் வருவதற்கு ஆவன செய்த திருச்சிராப்பள்ளி **வித்துவான் தி. பட்டுசாமி ஓதுவார்** அவர்களுக்கும், பனசைச் செந்தமிழ்க் கல்லூரி பிரின்ஸிபால் **திரு. K. M. வேங்கடராமையா** M. A., B. O. L. அவர்களுக்கும் செந்திலாண்டவன் திருவருள் மல்குவதாகுக!

இங்ஙனம்,

ஸ்ரீ காசிமடம்
திருப்பனந்தாள்
5—4—54

மகாலிங்கத் தம்பிரான்,
இளவரசு.

உ

Siva Siva

Tiruvachakam is classified as the 8th Tirumurai and it has the unique greatness of being written by the Holy Hand of Lord Siva. The saying, "He, who does not melt for *Tiruvachakam*, will not melt for any other *vachakam*" tells volumes of its greatness.

It was *Rev. G. U. Pope* who had the "ஆகூழ்" or the good fortune to translate Tiruvachakam into English and no doubt it was heartily welcomed by the English-knowing Tamils then. The revered author had indeed laboured hard to give correct rendering in English but as he was foreign to the customs and manners of the Tamils and also to their Philosophy he could not give accurate English renderings to some passages which may be overlooked.

This small booklet contains 66 stanzas from Tiruvachakam most of which are very dear to the peoples in the South. The readers are requested to "Scrutinize all things and hold fast that which is good"

My gratitude and reverence are due to His Holiness *Sri la Sri Kasivasi Arulnandi Tambiran Swamigal Avergal*, Sri Kasi Mutt, Tirupanandal for printing this booklet.

All Hail to the Lotus Feet of Lord Siva!

ஸ்ரீ மாணிக்கவாசக சுவாமிகள்

மாணிக்கவாசக சுவாமிகள் மதுரைக்கருகிலுள்ள திருவாதவூரில் அவதரித்தார்; இளமையில் கல்வியறிவு பெற்று நல்லொழுக்கின் தலைநின்றார்; அரிமர்த்தன பாண்டியனின் முதல் அமைச்சரானார்; அரசன் ஆணையால் கீழக் கடற்கரைக்குக் குதிரை வாங்கச் சென்றார்; திருப்பெருந்துறையில் குருமூர்த்தியாக எழுந்தருளி வந்த இறைவனிடம் ஞானோபதேசமும் **மாணிக்கவாசகர்** என்ற திருநாமமும் பெற்றார்; இறைபணியில் நின்றார்; பின்பு அரசனின் கோபத்திற்கு இலக்கானார். நரிகள் பரிகளானதையும், வைகை பெருகியதையும், இறைவன் பிரம்படி பட்டதையும் கண்ட பாண்டியன் வாதவூரரின் பெருமையை உணர்ந்து மன்னிப்பு வேண்டினான். வாதவூரர் அரசியலைத் துறந்து திருப்பெருந்துறை, உத்தரகோசமங்கை, திருவாரூர், திருவண்ணாமலை முதலிய சிவத்தலங்களை வணங்கிப் பதிகம்பாடி இறுதியில் தில்லை வந்தடைந்தார்; தம்மிடம் வாதுக்கு வந்த புத்தர்களை வென்றார்.

ஒருநாள் நடராஜப்பெருமான் அந்தணவடிவு கொண்டு மாணிக்கவாசகரிடம் வந்து **திருவாசகம், திருக்கோவையார்** இரண்டினையும் தாமே எழுதிக் கைச்சாத்திட்டுக் கனகசபையில் வைத்து மறைந்தருளினார். மாணிக்கவாசகர் ஆனி மகத்தில் இறைவனோடு இரண்டறக்கலந்தார்.

உ

செந்திலாண்டவன் துணை

திருச்சிற்றம்பலம்

திருவாசகப் பழமொழிகள்

1. **தாயிற் சிறந்த தயா**

தாயிற் சிறந்த தயாவான தத்துவனே ! 1

—**சிவபுராணம் : வரி 61.**

1. **Mother's Love**

Essential grace more precious than a *mother's love*!

2. **இந்திர ஞாலம்**

அந்தண னாகி ஆண்டுகொண் டருளி

இந்திர ஞாலங் காட்டிய இயல்பும். 2

கீர்த்தித் திருவகவல் : வரி 42-43.

2. **Magic Illusion**

Becoming a Brahman, graciously making me His own,

He showed me the *magic illusion.*

---

1. தயாவான - கருணைவடிவான.
2. இந்திரஞாலம் - இந்திரஜாலம்.

3. அந்தமில் பெருமை அழலுருக் கரந்து
சுந்தர வேடத் தொருமுத லுருவுகொண்(டு)
இந்திர ஞாலம் போலவந் தருளி. 2

—கீர்த்தித் திருவகவல் : வரி 92-94.

3. Magic splendour

In beauteous disguise the only primal One assumed a form,
In *magic splendour* came in grace,
Took each one's nature into Himself—

4. அலைகடல் திரையின் ஆர்த்து; அங்கை நெல்லிக்கனி

மறையோர் கோலம் காட்டி யருள லும்
உளையா அன்பென் புருக ஓலமிட்டு
அலைகடல் திரையின் ஆர்த்தார்த் தோங்கித்
தலைதடு மாறா வீழ்ந்துபுரண்(டு) அலறிப்
பித்தரின் மயங்கி மத்தரின் மதித்து

---

3. அந்தம்இல் - அளவற்ற. அழல்உரு - சோதி வடிவம். கரந்து - மறைத்து. சுந்தரவேடம் - அழகிய காதணி (கா. சு.)

4. மறையோர் கோலம் - ஆசிரியவடிவம். உளையா - சலிப்பில்லாத. ஓலமிட்டு – முறையிட்டு. திரை - அலை. மத்தர் - வெறிகொண்டவர். கடக்களிறு - மதயானை

நாட்டவர் மருளவும் கேட்டவர் வியப்பவும்
கடக்களி றேற்றாத் தடப்பெரு மதத்தின்
ஆற்றே னாக அவையவஞ் சுவைதரு
கோற்றேன் கொண்டு செய்தனன் ;
ஏற்றார் மூதூர் எழில்நகை எரியின்
வீழ்வித் தாங்(கு)அன்(று)
அருட்பெருந் தீயின் அடியோம் அடிக்குடில்
ஒருத்தரும் வழாமை யொடுக்கினன் ;
தடக்கையின் நெல்லிக் கனியெனக் காயினன். 3

—திருவண்டப் பகுதி : வரி 149-162.

4, Sea's loud waves ; Ripe Nelli fruit in palm

He as a Brahman showed His glory forth,
Then, while undying love dissolved my frame, I cried ;
I raised enraptured voice above the billowy *sea's loud waves* ;
In utter wilderment I fell, I rolled, I cried aloud,

ஏற்று - பாகனை ஏறவிடாத. தடப்பெருமதம் - மிக்க மதம். கோல்தேன் - கொம்புத்தேன். ஏற்றார் - பகைவர். மூதூர் - திரிபுரம். எழில்நகை - அழகு பொருந்திய சிரிப்பு. எரியின் - நெருப்பால். வீழ்வித்தாங்கு - வீழ்த்தியதுபோல. அடிக்குடில் - அடிமையுடம்பாகிய சிறுகுடிசை (கா. சு.) ஒருத்தரும் - ஒருவரும். தடக்கை - வளைந்த கை.

Madman distraught, and as a maniac raved;
While those who saw were wildered, who heard it wondered sore.
More than the frenzy wild of raging elephant
Bore me away beyond endurance far.
'T was then through all my limbs
A honied sweetness He infused, and made me blest.
The ancient city of His foes with fire lit by His beauteous smile
He caused to fall. Ev'n so that day
With mighty fire of grace our humble dwellings
He destroyed that none were left.
To me as the *ripe Nelli fruit in palm* He was

5. **தழலது கண்ட மெழுகது போல; கொடிறும். பேதையும் கொண்டது விடா; பசுமரத் தாணி; கற்றுமனம்; அடிநீங்கா நிழல்**

தழலது கண்ட மெழுகது போலத்
தொழுதுளம் உருகி அழுதுடல் கம்பித்(து)

---

5. தழலதுகண்ட - நெருப்பிற்பட்ட. கம்பித்து - நடுக்க மடைந்து. கொடிறு - குறடு. பேதை - மூடன்.

ஆடியும் அலறியும் பாடியும் பரவியும்
கொடிறும் பேதையும் கொண்டது விடாது எனும்
படியே யாகிநல் இடையறு அன்பில்
பசுமரத் தாணி அறைந்தாற் போலக்
கசிவது பெருகிக் கடலென மறுகி
அகங்குழைந் தனுகுல மாய்மெய் விதிர்த்துச்
சகம்பேய் என்று தம்மைச் சிரிப்ப
நாணது வொழிந்து நாடவர் பழித்துரை
பூணது வாகக் கோணுத லின்றிச்
சதுரிழந் தறிமால் கொண்டு சாரும்
கதியது பரமா அதிசய மாகக்
கற்று மனம்எனக் கதறியும் பதறியும்
மற்றோர் தெய்வம் கனவிலும் நினையா(து)
அருபரத் தொருவன் அவனியில் வந்து
குருபர னாகி அருளிய பெருமையைச்
சிறுமையென் றிகழாதே திருவடி யிணையைப்
பிறிவினை யறியா நிழலது போல
முன்பின் னாகி முனியா தத்திசை
என்புநைந் துருகி நெக்குநெக் கேங்கி

அனுகுலமாய் - ஏற்ப; அனுகூலம் என்ற வட சொற் சிதைவு (ச. த.). சகம் - உலகத்தவர். சதுர் - திறம். அறிமால் - சிவஞானம் பெறவேண்டும் என்ற பேரவா. சாரும் கதி - அடைதற்குரிய வீடு. பரமா அதிசயம் - மேலான

அன்பெனும் ஆறு கரையது புரள
நன்புலன் ஒன்றி நாதவென் றரற்றி
உரைதடு மாறி உரோமஞ் சிலிர்ப்பக்
கரமலர் மொட்டித்(து) இருதய மலரக்
கண்களி கூர நுண்துளி அரும்பச்
சாயா அன்பினை நாடொறுந் தழைப்பவர்
தாயே யாகி வளர்த்தனை போற்றி ! 4

—போற்றித் திருவகவல் : வரி 60-87.

5. **Wax before fire; The tooth of elephant and woman's grasp relax not; Wedge driven into soft young tree; As Cow yearns for its calf; Little shadow not parting from its substance.**

As wax before the unwearied fire
With melting soul I worshipt, wept, and bent myself,
Danced, cried aloud, and sang and prayed.

வியப்பு. கற்ரு-கன்றினையுடைய பசு. அருபரத்து ஒருவன் - எட்டுதற்கரிய மேலான வீட்டினையுடைய ஒரு பரம் பொருள் (கா. சு.) அவனி - உலகம். கரம் - கை. மொட்டித்து - குவித்து. சாயா - தளராத. தழைப்பவர் - வளர்ப்பவர்.

They say; '*The tooth of elephant and woman's grasp relax not.*'
So I with love, real, intermitting never,
Was pierced, as *wedge driven into soft young tree.*
All tears, I like the refluent sea was tossed;
Soul was subdued, and body quivered with delight.
While the world called me demon, mocking me-
False shame I threw aside; the folks abusive word
I took as ornament; nor did I swerve.
My mind was rapt ;- a fool, but in folly wise,—
The goal I sought to reach infinity! All wondering desire,
As cow yearns for its calf, I moaning, hurried to and fro.
Not ev'n in dreams thought I of other gods.
The One most precious Infinite to earth came down;
Nor did I greatness of the Sage superne contemn,
Who came in grace. Thus from the pair of sacred feet

Like shadow from its substance parting not,
Before, behind, at every point, to it I
clung.
My inmost self in strong desire dissolved,
I yearned
Love's river overflowed its banks;
My senses all in Him were centred; 'Lord!'
I cried.
With stammering speech, and quivering
frame
I clasped adoring hands; my heart
expanding like a flower.
Eyes gleamed with joy and tears distilled.
His love that fails not day by day still
burgeons forth!
Like mother, Thou has brought me up,
I praise!

6. நாய்க்குத் தவிசு இடுதல்

கேட்டாரு மறியாதான் கேடொன் றில்லான்
கிளையிலான் கேளாதே எல்லாங் கேட்டான்
நாட்டார்கள் விழித்திருப்ப ஞாலத் துள்ளே
நாயினுக்குத் தவிசிட்டு நாயி னேற்கே

---

6. ஆரும் - எவராலும். கிளை - உறவு. ஞாலம் - உலகு. தவிசு - ஆசனம். மீட்டேயும் - மீண்டும். விச்சை - வித்தை - அற்புதம்.

காட்டா தனவெல்லாங் காட்டிப் பின்னும்
கேளா தனவெல்லாங் கேட்பித்(து)என்னை
மீட்டேயும் பிறவாமல் காத்தாட் கொண்டான்
எம்பெருமான் செய்திட்ட விச்சை தானே. 32
—திருச்சதகம்-சுட்டறுத்தல்: 8

6. **A royal seat to a dog**

Him none by hearing know; He knoweth no decay;
He hath no kin; naught asking, heareth all!
While people of the land beheld, here on this earth
to me, a cur, He gave royal seat;
To me, a dog, all things not shown before, He showed;
all things not heard before, He caused to hear;
And guarding me from future 'birth', He made me His.
Such is the wondrous work our Lord hath wrought for me!

7. **தாய்போல் கருணை செய்தல்**

ஒய்வி லாதன உவமனில் இறந்தன
ஒண்மலர்த் தாள் தந்து
நாயி லாகிய குலத்தினுங் கடைப்படும்
என்னைநன் னெறிகாட்டித்

தாயி லாகிய இன்னருள் புரிந்தஎன்
 தலைவனை நனிகாணேன்
தீயில் வீழ்கிலேன் திண்வரை யுருள்கிலேன்
 செழுங்கடல் புகுவேனே. 43

—திருச்சதகம்-ஆத்துமசுத்தி: 9

7. **Mother's Love**

O bliss that ceases not! O bliss beyond
 compare! His bright flower-foot
He gave; to me of kind more base than
 dogs, He showed the perfect way.
My Chief, who gave me grace sweeter than
 mother's love, I see not now!
Yet in the fire I fall not, wander not o'er
 hills; I'll plunge in the deep sea!

8. பட்டி மண்டபம் ஏற்றினை

கட்ட றுத்தெனை யாண்டுகண் ணாரநீ
 றிட்ட அன்பரொ டியாவருங் காணவே

---

7. ஒய்வு - அழிவு. உவமனில் இறந்தன - உவமிக்கப் படும் பொருள் யாவற்றையும் கடந்தன (கா. சு.) தாள் - திருவடி. வரை - மலை.

8. கட்டு - பாசம். நீறு - திருநீறு. பட்டி மண்டபம் - வாதம் செய்யும் அவை. "பட்டி - நாய், 'நாய் சிவிகை யேற்றுவித்த' என்றதுங் காண்க. பட்டி - கள்வன் என்பாருமுளர்"-கா. சு. (2-வது) ஏற்றினை - இடபவாக

பட்டி மண்டபம் ஏற்றினை ஏற்றினை
எட்டி னோடிரண் டும்மறி யேனையே. 53

—திருச்சதகம்-கைம்மாறு கொடுத்தல் : 9

8. **Making one great**

My bonds Thou loosed'st, mad'st me
Thine! And all
The loving saints–who ashes gave—beheld.
Thou didst exalt, within the temple court,
Ev'n me Thou didst exalt, *who know not
anything*.

9. **கண்கெட்ட ஊர்க்காளை**

போரே றேநின் பொன்னகர்வாய்
நீபோந் தருளி இருள்நீக்கி
வாரே றிளமென் முலையாளோ
டுடன்வந் தருள அருள்பெற்ற

னத்தை யுடையவனே. எட்டினோடிரண்டு மறியேன் - "எட்டும் இரண்டும் கூட்டில் பத்தென்று சொல்லும் எண்ணறிவற்றவன் என்றும், எட்டென்னும் எண்ணின் தமிழ் வடிவு 'அ', இரண்டென்னும் எண்ணின் தமிழ் வடிவு 'உ', அ உ தெரியாத எழுத்தறிவற்றவன் என்றும்; எட்டு 'அ', இரண்டும் உகரமும் மகரமுமாகிய எழுத்துக்கள், ஆக எட்டினோடிரண்டு, அகார உகார மகாரமாகிய பிரணவ பஞ்சாக்கரம், இதனை அறியாதவன் என்றும் பொருள் கொள்ளக் கிடக்கின்றன." (ச. த.) எட்டும் இரண்டும் பத்து; பத்து என்னும் எண்ணின் தமிழ் வடிவம் 'ய' என்பது; இவ்வெழுத்து யகரம்போன்றிருத்தலின் அதற்கு ஆன்மா என்று பொருள்கொண்டு ஆன்மநிலை யறியாதவன் என்றும் பொருள் கொள்ளலாம்.

சீரே றடியார் நின்பாதம்
சேரக் கண்டும் **கண்கெட்ட**
ஊரே ருயிங்கு உழல்வேனே
கொடியேன் உயிர்தான் உலவாதே. 57

—**திருச்சதகம்-அநுபோகசுத்தி: 3**

9. **A sightless hog that roams a village street**

Thou warrior strong from out Thy golden
city cam'st, mad'st darkness flee;
With her the beauteous Queen didst deign
to come. The glorious devotees
Who grace had gained, approached Thy
Feet. I saw, yet like a *sightless hog*
That roams the village street, shall I still
roam a wretch doomed to live on ?

10. **பிழைத்தவை பொறுத்தல் பெரியவர் கடமை**

இழித்தனன் என்னை யானே
எம்பிரான் போற்றி போற்றி
பழித்திலேன் உன்னை என்னை
ஆளுடைப் பாதம் போற்றி

---

9. பொன்நகர்வாய் - அழகிய ஊரினின்றும் புறப்பட்டு. ஊர்ஏறு - ஆள்வாரில்லாத ஊர்க்காளை (ச. த.) ஊர்ப்பன்றி (கா. சு.)

பிழைத்தவை பொறுக்கை யெல்லாம்
பெரியவர் கடமை போற்றி
ஒழித்திடிவ் வாழ்வு போற்றி
உம்பர்நாட் டெம்பி ரானே.
—திருச்சதகம்-காருணியத்திரங்கல்: 6

10. **Faults to forgive is duty of the great**
I have myself renounced, even I ;
Hail, hail, Embiran !
I have not done Thee wrong ! Hail !
Foot to which I service owe !
Hail ! *Faults to forgive is duty of the great !*
O cause this earthly life to cease !
Hail, Lord of heaven !

11. **விதையின் அழிவு ஆகாது**
விச்சுக் கேடு பொய்க்காகா(து)
என் றிங் கெனை வைத்தாய்
இச்சைக்(கு) ஆனர் எல்லாரும்
வந்துன் தாள்சேர்ந்தார்

---

10. பொறுக்கை - பொறுத்தல். ஒழித்திடு - ஒழிப்பாய்.

11. விச்சுக்கேடு - விதை அழிதல். இச்சைக்கு ஆனர் - உன்னல் விரும்பப் பெற்றவர். பிச்சைத் தேவா - பிச்சை கொள்ளும் பிரானே.

அச்சத் தாலே ஆழ்ந்திடு
கின்றேன் ஆரூரெம்
பிச்சைத் தேவா என்நான்
செய்கேன் பேசாயே. 85

—திருச்சதகம்-ஆனந்தபரவசம்: 1

11. Seeds shall not be destroyed

'*The seed of lies is not destroyed*';—so
saying Thou hast placed me here!—
All those that were to Thy desire have
come, and reached Thy sacred Foot!
In depths of fear I sink. O God, Who didst
in Arur ask for alms,
What shall I do? Speak Thou to me!

12. ஊர்ப்பசு கனைக்கக் குருட்டுப்பசுவும் கனைத்தல்

தாராய் உடையாய் அடியேற்(கு)
உன்றுள் இணையன்பு
பேரா உலகம் புக்கார்அடியார்
புறமே போந்தேன்யான்

---

12. தாராய் - தருவாய். ஊரா - ஊர்ப்பசு. மிலைக்க - கனைக்க (ச. த.) மேய (கா. சு.) ஆராய் - எத்தன்மைய ளுய் (கா. சு.) மயல் - விருப்பம்.

ஊரா மிலைக்கக் குருட்டா மிலைத்தாங்(கு)
உன்றாள் இணையன்புக்(கு)
ஆரா யடியேன் அயலே
மயல்கொண் டழுகேனே. 91

—**திருச்சதகம்-ஆனந்தபரவசம்:**

12. Blind cow following the village cow to graze

O Master, give Thy slave to love Thy Foot;
Thy servants now have gained
The world from which they come not back;
outside I have remained, I've tried
*'*To crown the village cow, and so have crowned the blind!*'
From love, of Thy twain Feet
Estranged, a slave I 'wildered weep!

(* I cannot find a clue. It means : - I have striven in vain'—Rev. G. U. Pope.)

13. குழந்தை கையில் பொற்கிண்ணம்

மையி லங்குநற் கண்ணி பங்கனே
வந்தெனைப்பணி கொண்ட பின்**மழக்**
கையி லங்குபொற் கிண்ணம் என்றலால்
அரியை என்(று)உனைக் கருது கின்றிலேன்

---

18. இலங்கு - விளங்குகின்ற. கண்ணி - கண்களையுடையவள் ; உமை. மழக்கை - இளங்கை ; குழந்தை கை. அரியை - அருமையுடையை.

மெய்யி லங்குவெண் ணீற்று மேனியாய்
மெய்ம்மை அன்பருன் மெய்ம்மை மேவினர்
பொய்யி லங்கெனைப் புகுத விட்டுநீ
போவ தோசொலாய் பொருத்த மாவதே. 96
—திருச்சதகம்-ஆனந்தாதீதம்: 2

13. **A golden cup in a child's hand**

O Half of Her with eyes of glist'ning jet,
Thou cam'st and mad'st me Thine ,with tender hand
As feeding me from golden cup,--since when
hard of access I deem Thee never-more ;
Thou on Whose Body gleam the ashes white !
They, loving Thee in truth, have reach'd the True !
But, tell me, is it meet that Thou should'st go
and leave me here, in falsehood thus to fall ?

14. **கல்லைப் பிசைந்து கனியாக்கல்**

இல்லை நின்கழற் கன்ப தென்கணே
ஏல மேலுநற் குழலி பங்கனே
கல்லை மென்கனி யாக்கும் விச்சைகொண்(டு)
என்னை நின்கழற்(கு) அன்பன் ஆக்கினுய்

எல்லை யில்லைநின் கருணை எம்பிரான்
ஏது கொண்டுநான் ஏது செய்யினும்
வல்லை யேயெனக் கின்னும் உன்கழல்
காட்டி மீட்கவும் மறுவில் வானனே. 98

—திருச்சதகம்-ஆனந்தாதீதம்: 4

14. **Making a stone a sweet fruit**

There was no love in me towards Thy Foot,
O Half of Her with beauteous fragrant locks!
By magic power that stones to mellow fruit converts, Thou mad'st me lover of Thy Feet.
Our Lord, Thy tender love no limit knows.
Whatever sways me now, whate'er my deed,
Thou can'st even yet Thy Foot again to me
display and save, O Spotless Heavenly One!

15. **தாம் வளர்த்தது நச்சு மரமேனும் கொல்லார்**

விச்ச தின்றியே விளைவு செய்குவாய்
விண்ணு மண்ணக முழுதும் யாவையும்
வைச்சு வாங்குவாய் வஞ்ச கப்பெரும்
புலைய னேனையுன் கோயில் வாயிலில்

---

14. ஏலம் - மயிர்ச்சாந்து. ஏலும் - பொருந்தும். விச்சை - வித்தை. மறுவில் - குற்றமற்ற.

பிச்ச னாக்கினாய் பெரிய அன்பருக்(கு)
உரியன் ஆக்கினாய் **தாம்வ ளர்த்ததோர்**
நச்சு மாமரம் ஆயி னுங்கொலார்
நானும் அங்ஙனே உடைய நாதனே. 100

— திருச்சதகம்-ஆனந்தாதீதம்: 6

15. Even should the tree they plant yield poison, men destroy it not

Without a seed, the fruit Thou causest spring;
th' entire of heaven and earth, and all therein
Thou didst ordain, and wilt destroy! Me too,
deceitful, mean, within Thy temple gates
Thou fill'd'st with frenzy; mad'st to join the band
of Thy great loving ones! *Ev'n should the tree*
They plant yield poison, men destroy it not;-
and thus am I, my Owner and my Lord!

---

15. விச்சு - விதை. வைச்சு - வைத்து; காத்து. வாங்குவாய் - ஒடுக்குவாய் (கா. சு.) பிச்சன் - பித்துடையவன். நச்சுமரம் - எட்டி. கொலார் - வெட்டமாட்டார்கள்.

16. ஆற்றங்கரை மரம்

காருறு கண்ணியர் ஐம்புலன்
ஆற்றங் கரைமரமாய்
வேருறு வேனை விடுதிகண்
டாய்விளங் குந்திருவா
ரூருறை வாய்!மன்னும் உத்தர
கோசமங் கைக்கரசே !
வாருறு பூண்முலை யாள்பங்க !
என்னை வளர்ப்பவனே ! 107

—நீத்தல் விண்ணப்பம்: 3

16. A tree on river bank

A tree on river bank of dark-eyed maiden's
senses five
I rooted stand ! Lo, me Thou hast
forsaken ; Thou who dwell'st
In Arur's shrine renowned ; O Uttarakosa
mangai's King !
Half of her form, the beauteous one !
Thou fosterer of my life !

---

16. ஐம்புலன் ஆற்றங்கரைமரமாய் வேர் உறு வேனை - ஐம்புல இன்பங்களாகிய ஆற்றின் கரையிலே வளர்கின்ற மரமாய், வேர் ஊன்றுவேனை (கா. சு) விடுதி - அவற்றினின்று என்னை நீக்குக.

17. விளக்கில் விழுந்த விட்டில்

செழிகின்ற **தீப்புகு விட்டிலில்**
சின்மொழி யாரிற்பன்னாள்
விழுகின்ற என்னை விடுதிகண்
டாய்வெறி வாயறுகால்
உழுகின்ற பூமுடி உத்தர
கோசமங் கைக்கரசே !
வழிநின்று நின்னருளாரமு(து)
ஊட்ட மறுத்தனனே. 109

—**நீத்தல் விண்ணப்பம்: 5**

17. Moth in glistening flame

Like moth in glistening flame,
to those of gentle speech, long time
I fall a prey ! Lo, Thou'st forsaken me !
In Thy flower-crown
Sweet bees sip fragrant honey ;
Uttarakosamangai's King !
Since with ambrosia of Thy grace to
feed me I refused !

---

17. ***செழிகின்ற - வளர்கின்ற. சின்மொழியார் - பெண்கள். வெறி - தேன். அறுகால் - வண்டு. உழுகின்ற - மொய்க்கின்ற. மறுத்தனன் - மறுத்தேன்.***

18. பெரியோர் சிறுவர்செய்த பிழை பொறுப்பர்

மறுத்தனன் யானுன் னருளறி
யாமையில் என்மணியே
வெறுத்தெனை நீவிட் டிடுதிகண்
டாய்வினை யின்தொகுதி
ஒறுத்தெனை யாண்டுகொள் உத்தர
கோசமங் கைக்கரசே !
பொறுப்பரன் றேபெரி யோர்சிறு
நாய்கள்தம் பொய்யினையே. 110

—நீத்தல் விண்ணப்பம்: 6

18. Faults to forgive is the duty of the great

Through ignorance I have Thy grace
refused and Thou, my Gem,
Hast loathed me! Lo, Thou'st forsaken me!
My throng of 'deeds'
Suppress, and make me Thine,—
O Uttarakosamangai's King!
Will not the great-soul'd bear,
though little curs are false?

---

18. என்மணியே - என் மாணிக்கமே. ஒறுத்து - அடக்கி.

19. இருதலைக் கொள்ளி எறும்பு

இருதலைக் கொள்ளியி னுள்ளெறும்(பு)
ஒத்து நினைப்பிரிந்த
விரிதலை யேனை விடுதிகண்
டாய்வியன் மூவுலகுக்(கு)
ஒருதலை வா!மன் னும் உத்தர
கோசமங் கைக்கரசே!
பொருதலை மூவிலை வேல்வலன்
ஏந்திப் பொலிபவனே! 113

—நீத்தல் விண்ணப்பம்: 9

19. Ant on fire brand lit at diverse ends

Like ant on fire brand lit at diverse ends,
sever'd from Thee,
Distraught, Lo! me Thou hast forsaken,
Thou the only Lord
Of the vast triple world, strong
Uttarakosamangai's King
Whose bright right hand uplifts the
warrior's triple-headed spear!

---

19. விரிதலையேனை - விரிந்ததலையாகிய அலங்கோலமுடையேனை (கா. சு.) வியன் - பெரிய. வலன் - வலப்பக்கத்தில்.

20. கடலினுள் நாய் நக்கியதுபோல

கடலினுள் நாய்நக்கி யாங்(கு)உன்
கருணைக் கடலினுள்ளம்
விடலரி யேனை விடுதிகண்
டாய்விட லில்லடியார்
உடலில மேமன்னும் உத்தர
கோசமங் கைக்கரசே !
மடலின்மட் டே!மணி யே!அமு
தே!என் மதுவெள்ளமே! 117

—**நீத்தல் விண்ணப்பம்: 13**

20. As dog laps water from the lake

As dog laps water from the lake,
my soul Thy mercy's sea
Quits not; me Thou'st forsaken,
Uttarakosamangai's King;
Who dost as in a home abide
in those who leave Thee not;
Wine of the palm! Ambrosia! Gem!
My flood of bliss!

---

20. உடல் இலமே மன்னும் - உடலையே இடமாகக் கொள்ளும். மடல் - பூ விதழ். மட்டு - தேன்.

21. வெள்ளத்துள் நாவற்றியதுபோல

வெள்ளத்துள் நாவற்றி யாங்(கு)உன்
அருள்பெற்றுத் துன்பத்தின் றும்
விள்ளக் கிலேனை விடுதிகண்
டாய்விரும் பும்மடியார்
உள்ளத்துள் ளாய்!மன்னும் உத்தர
கோசமங் கைக்கரசே !
கள்ளத்து ளேற்கரு ளாய்;களி
யாத களியெனக்கே. 118

—**நீத்தல் விண்ணப்பம்: 14**

21. Like one whose tongue amid the flood is parched

Like one whose tongue amid the flood is parched I gain'd Thy grace,
Yet sorrow springs ; me Thou'st forsaken ; Uttarakosamangai's King ;
Who ever dwellest in Thy servants' hearts that Thee desire !
To me in guile immersed grant grace ! My joy is joyless all !

---

21. விள்ளக்கிலேனை - நீங்குவதற்கு ஆற்றல் இல்லாத என்னை. களியாதகளி - பெற்றுமகிழாத பேரின்பம்.

22. ஆண்டுகொள், விற்றுக்கொள், ஒற்றிவை

இருந்தென்னை **ஆண்டுகொள் விற்றுக்கொள்**
ஒற்றிவை என்னின் அல்லால்
விருந்தின னேனை விடுதிகண்
டாய்மிக்க நஞ்சமுதா
அருந்தின னே!மன்னும் உத்தர
கோசமங் கைக்கரசே!
மருந்தின னே!பிற விப்பிணிப்
பட்டு மடங்கினர்க்கே. 122

—*நீத்தல் விண்ணப்பம்: 18*

22. Use, sell, pledge me

'Be with me! Govern, use, sell, pledge
me:' Thus I cried,
Yet me, erewhile Thy guest, Thou hast
forsaken, Who didst drink
The poison as ambrosia :
Uttarakosamangai's King !
The healing Balm for those bowed down
by 'changeful birth's' disease !

---

22. விருந்தினனேனை - புதிதாய் வந்த என்னை.

23. கொழுகொம்பில்லாக் கொடி

கொம்பரில் லாக்கொடி போல்அல
மந்தனன் கோமளமே
வெம்புகின் றேனை விடுதிகண்
டாய்விண்ணர் நண்ணுகில்லா
உம்பருள் ளாய்!மன்னும் உத்தர
கோசமங் கைக்கரசே!
அம்பர மே!நில னே!அனல்
காலொ(டு)அப்(பு) ஆனவனே. 124

—**நீத்தல் விண்ணப்பம்: 20**

23. Like climbing plant with no supporting bough

Like climbing plant with no supporting
bough, I wavering hung!
Lo, Tender One, me trembling Thou'st
forsaken ; Thou Who dwell'st
Where heavenly ones come not ; strong
Uttarakosamangai's King ;
Thou Who art Ether, Earth, and Fire,
and Wind and watery Flood!

---

23. கொம்பர் - கொழுகொம்பு. அலமந்தனன் - சுழன்றேன். கோமளமே - இளமையும் அழகும் உடையவனே. வெம்புகின்றேனை - தவிக்கின்ற என்னை. விண்ணர் — தேவர்கள், அம்பரம் - வான். அனல் - தீ. கால் - காற்று. அப்பு - நீர்.

24. யானைப் போரில் சிறு புதர்

ஆனைவெம் போரில் குறுந்தூ(று)
எனப்புல னால்அலைப்புண்
டேனையெங் தாய்!விட் டிடுதிகண்
டாய்வினை யேன்மனத்துத்
தேனையும் பாலையும் கன்னலை
யும்மமு தத்தையுமொத்(து)
ஊனையும் என்பினை யும்முருக்
காநின்ற ஒண்மையனே. 125

— நீத்தல் விண்ணப்பம்: 21

24. Like little shrubs where elephants contend

Like little shrubs where elephants contend,
by senses five
I've been sore vexed ; lo, Thou, my Father,
hast forsaken me !
To sinful me commingled honey, milk,
sweet cane, ambrosia,
Light of my soul,—thrilling my flesh and
inmost frame,—Thou art !

***24.* குறுந்தூறு - சிறுபுதர். கன்னல் - கருப்பஞ் சாறு. ஒண்மையனே - ஒளியுடையவனே.**

25. நெய்க்குடத்தை மொய்க்கும் எறும்பு

உள்ளன வேநிற்க இல்லன
செய்யுமை யல்துழனி
வெள்ளன லேனை விடுதிகண்
டாய்வியன் மாத்தடக்கைப்
பொள்ளல்நல் வேழத் துரியாய் !
புலனின்கட் போத லொட்டா
மெள்ளன வே**மொய்க்கு நெய்க்குடந்**
தன்னை எறும்பெனவே. 128

—நீத்தல் விண்ணப்பம்: 24

25. Like ants that swarm round the oil-jar

Things true abiding, folly-stirred,
for vanities I burn'd
And Thou'st forsaken me ; Thou Who
as robe dost wear the hide
Of fiery mighty-handed elephant !—
I joys of sense
Seeking gain not, *like ants that noiseless*
round the oil-jar swarm.

---

25. **மையல் - மயக்கம். துழனி - ஆரவாரம். அலேனை - தீயனாகிய என்னை. தடக்கை - நீண்ட துதிக்கை. பொள்ளல் - துளை. வேழத்துரி - யானைத்தோல்.**

26. எறும்பிடைஅகப்பட்ட நாங்கூழ்

எறும்பிடை நாங்கூழ் எனப்புல
னால்அரிப் புண்(டு)அலந்த
வெறுந்தமி யேனை **விடுதி**கண்
டாய்வெய்ய கூற்றொடுங்க
உறுங்கடிப் போதவை யேயுணர்(வு)
உற்றவர் உம்பரும்பர்
பெறும்பத மேயடி யார்பெய
ராத பெருமையனே. 129

—நீத்தல் விண்ணப்பம்: 25

26. Like worm in the midst of ants

Like worm in midst of ants, by senses
gnawed and troubled sore,
Me, utterly alone, Lo! Thou'st forsaken;
Thou Whom fiery death obeyed;
Whose fragrant flowery Foot the heavenly
ones attain, and they
Who know; O Mighty One, Who from Thy
servants partest not!

---

26. அலந்த - வருந்திய. கூற்று - இயமன். உறும் - பொருந்தும். கடிப்போது - மணம்பொருந்திய மலர் போன்ற திருவடி. உணர்வுற்றவர் - அறிந்தவர். உம்பர் உம்பர் பெறும்பதமே - வானவர் பதவிக்குப் மேலானதாகப் பெறும் பதவியானவனே. (கா. சு.)

27. நீரற்ற குளத்தில் மீன் அழிதல்

பெருநீர் அறச்சிறு மீன்துவண்
டாங்கு *நினைப்பிரிந்த*
வெருநீர்மை யேனை விடுதிகண்
டாய்வியன் கங்கைபொங்கி
வருநீர் மடுவுள் மலைச்சிறு
தோணி வடிவின்வெள்ளைக்
குருநீர் மதிபொதி யுஞ்சடை
வானக் கொழுமணியே.

— நீத்தல் விண்ணப்பம்: 26

27. When the great waters fail, the little fishes faint

‘*When the great waters fail, the little fishes faint*;’ so reft of Thee
I quake. Lo! Thou’st forsaken me!
The moon’s white crescent borne
On Ganga’s wave, like little skiff on mountain stream,
Is hidden in Thy braided locks,—
O choicest Gem of heaven!

---

27. துவண்டாங்கு - வாடியதுபோல. பெரு நீர்மை யேனை - அஞ்சும் தன்மையுடையேனை. குரு - நிறம். நீர் - தன்மை. மதி - சந்திரன்.

28. தயிரில் பொருமத்து

குலங்களைந் தாய்களைந் தாயென்னைக்
  குற்றங்கொற் றச்சிலையாம்
விலங்கல்எந் தாய்விட் டிடுதிகண்
  டாய்பொன்னின் மின்னுகொன்றை
அலங்கலந் தாமரை மேனியப்
  பா! ஒப்பி லாதவனே!
மலங்களைந் தாற்சுழல் வன் **தயி**
  ரிற்பொரு மத்துறவே. 133

— நீத்தல் விண்ணப்பம் 29

28. Stirred like milk by churning staff

Thyself from every fetter free, Thou
  freed'st me from all fault, O Sire,
Whose bow victorious in the mighty mount!
  Lo, Thou'st forsaken me!
Thy lotus-form the cassia's gold wreath
  wears; O matchless One!
By fivefold evil am I stirred *like milk*
  by churning staff.

---

28. குலம் - குடிப்பிறப்பு; கூட்டம் (கா. சு.) கொற்றம் - வெற்றி. சிலை - வில். விலங்கல் - மலை; மேரு. அலங்கல் - மாலை.

29. மத்துறுதயிர்

மத்துறு தண்டயி ரிற்புலன்
தீக்கது வக்கலங்கி
வித்துறு வேனை விடுதிகண்
டாய்வெண் டலைமிலைச்சிக்
கொத்துறு போது மிலைந்து
குடர்நெடு மாலைசுற்றித்
தத்துறு நீறுட னாரச்செஞ்
சாந்தணி சச்சையனே. 134

—*நீத்தல் விண்ணப்பம்: 30*

29. Curd stirred by churning staff

The senses' fire burns fierce; I am *stirr'd as the cool curds by churning staff.*
Lo! me Thou hast forsaken! Thou Who wear'st chaplet of skulls
And clustering wreaths of flowers, and the long entrails' twine; and dost Thyself
Adorn with ashes, and sweet sandal-paste, O Essence pure!

---

29. கதுவ - பற்ற. வித்துறுவேனை - வித்தாம் தன்மை எய்திய அடியேன்; வித்தாம் தன்மை அடைதல் - வேரூன்றி அழுந்துதல் (கதிர்மணிவிளக்கம்). மிலைச்சி - சூடி. ஆரச்செஞ்சாந்து - சந்தனக்கலவை. சச்சையனே - இளமையுடைய தலைவனே. (கா. சு.) மெய்ப்பொருளாக உள்ளவனே (கதிர்மணி விளக்கம்).

30. வாழைப்பழத்தின் மனங் கனிவித்தல்

குதுகுதுப் பின்றிநின் றென்குறிப்
 பேசெய்து நின்குறிப்பில்
விதுவிதுப் பேனை விடுதிகண்
 டாய்விரை யார்ந்தினிய
மதுமதுப் போன்றென்னை **வாழைப்**
 பழத்தின் மனங்கனிவித்(து)
எதிர்வதெப் போது பயில்விக்
 கயிலைப் பரம்பரனே. 138

—நீத்தல் விண்ணப்பம்: **34**

30. Melt the heart like plantain fruit

Stirred by no strong desire I did my will
 nor clung to Thine!
And, lo! Thou hast forsaken me! When wilt
 Thou yet as wine
Of joy meet me, and all my mind with
 fragrant sweetness fill.
As of the plantain fruit,— Transcendent
 Lord of Kailai's hill ?

---

30. குதுகுதுப்பு - மகிழ்ச்சி (கா. சு.) குறிப்பின் வழி ஒழுகுதல் - (கதிர்மணி விளக்கம்). விதுவிதுப்பேனை - விரைந்து செய்வேனை. விரை ஆர்ந்து - மணம் நிறைந்து. மதுமது - பூந்துகளோடு கூடியதேன். பயில்வி - அழைப்பித்துக்கொள் (கதிர்மணிவிளக்கம்) பயில் விக் கயிலை - விபயில் கயிலை - மலர் பொருந்தும் கயிலை. கா. சு.)

31. காட்டில் பிடித்த தீ

பொதும்புறு தீப்போல் புகைந்தெரி
யப்புலன் தீக்கதுவ
வெதும்புறு வேனை விடுதிகண்
டாய்விரை யார்நறவந்
ததும்புமந் தாரத்தில் தாரம்
பயின்றுமந் தம்முரல்வண்(டு)
அதும்புங் கொழுந்தேன் அவிர்சடை
வானத் தடலரசே!

—நீத்தல் விண்ணப்பம்: 36

31. Like flames in forest

Like flames in forest glade sense-fires with
smoky glare burn fierce!
I burn! Lo, Thou'st forsaken me!
O conquering King of heaven,
The garlands on Whose braided lock drip
honey, while the bees
Hum softly 'mid Mandara buds, whence
fragrant sweetness breathes.

---

31. பொதும்பு - மரச்செறிவு; காடு. கதுவ - பற்ற. வெதும்பு - வெப்பம். விரைஆர் - மணம் பொருந்திய. நறவம் - தேன். தாரம் - வல்லோசை. மந்தம் - மெல்லோசை. முரல் - ஒலிக்கின்ற. அதும்பும் - அழுந்தும். அவிர் - விளங்குகின்ற.

32. தலையால் நடத்தல் ; எய்ப்பில் வைப்பு

தனித்துணை நீநிற்க யான் தருக்
 கித்**தலை யால்நடந்த**
வினைத்துணை யேனை விடுதிகண்
 டாய்வினை யேனுடைய
மனத்துணை யேயென் றன் வாழ்முத
 லே!எனக்(கு) **எய்ப்பில்வைப்பே!**
தினைத்துணை யேனும் பொறேன்துயர்
 ஆக்கையின் திண்வலையே. 143

— *நீத்தல் விண்ணப்பம்: 93*

32. Wandered wanton ; Treasure that never fails

Sole Help, whilst Thou wert there I
 wandered *wanton*,—'deeds' my help!
Thou hast forsaken me, Thou Helper of
 my guilty soul;
Thou Source of all my being's bliss;
 Treasure that never fails!
No whit bear I this grievous body's mighty
 net!

---

32. தருக்கி - செருக்கடைந்து. வினைத்துணையேனை - இருவினையையுடைய என்னை; வினையைத் துணையாகக் கொண்ட என்னை. எய்ப்பில் வைப்பே - வேண்டிய காலத்தில் பயன்படத்தக்க சேமநிதி போன்றவனே. தினைத்துணை - தினையளவு. ஆக்கை - உடம்பு.

33. வேட்கை வெந்நீர்

முதலைச்செவ் வாய்ச்சியர் **வேட்கைவெந்**
நீரிற் கடிப்ப மூழ்கி
விதலைச்செய் வேனை விடுதிகண்
டாய்விடக்(கு) ஊன்மிடைந்த
சிதலைச்செய் காயம் பொறேன்சிவ
னே!முறை யோமுறையோ?
திதலைச்செய் பூண்முலை மங்கைபங்
கா!என் சிவகதியே! 145

— ***நீத்தல் விண்ணப்பம்: 41***

33. Hot flood of lust

In the *hot flood of lust* for those of ruddy lips, like crocodiles,—
I eager plunged. Lo! Thou'st forsaken me! This body foul,
Ant-eaten,—I endure not; Sivan, list to my complaint!
Thou Bridegroom of the beauteous Bride; my joyous Goal of bliss!

---

33. செவ்வாய்ச்சியர் - சிவந்த வாயுடைய பெண்கள். வெந்நீர் - வெப்பமுடைய நீர்; விரும்பத்தக்க நீர். விதலைச் செய்வேன் - துன்பப்படுவேன் (கா. சு.) விதலை - நடுக்கம், விடக்கு ஊன்மிடைந்த - புலால் நாற்றமுடைய தசை நிறைந்த. சிதலை - நோய். திதலை - தேமல்.

34. தழல் முழுகும் நெய்

முழுதயில் வேற்கண் ணியரென் னு
மூரித் **தழல்முழுகும்**
விழுதனை யேனை விடுதிகண்
டாய்நின் வெறிமலர்த்தாள்
தொழுதுசெல் வானத் தொழும்பரில்
கூட்டிடு சோத்தெம்பிரான்
பழுதுசெய் வேனை விடேலுடை
யாய்உன்னைப் பாடுவனே. 148

— *நீத்தல் விண்ணப்பம்: 44*

34. Like oil poured in fierce fire

Like oil was I poured in fierce fire of glancing dartlike eyes,—
Lo! Thou'st forsaken me! Whose word erst joined me to Thy saints,
Who ever worship at Thy fragrant flowery Feet; my Lord!
My Master, faulty though I am, forsake me not! Thee will I sing.

---

34. அயில்வேல் - கூரியவேல். மூரித்தழல் - வலிய தீ விழுது - வெண்ணெய். வெறி - மணம். தொழும்பர் - தொண்டர். சோத்து - சோத்தம் - தோத்திரம் - வணக்கம். பழுது - குற்றம்.

35. பலாப்பழத்தில் ஈ மொய்த்தல்

உழைதரு நோக்கியர் கொங்கைப்
 பலாப்பழத்(து) ஈயின் ஒப்பாய்
விழைதரு வேலை விடுதிகண்
 டாய்விடின் வேலைநஞ்சுண்
மழைதரு கண்டன் குணமிலி
 மானிடன் தேய்மதியன்
பழைதரு மாபர னென்றென்(று)
 அறைவன் பழிப்பினையே.

— *நீத்தல் விண்ணப்பம்: 46*

35. Like fly in Jack-fruit

Like fly in jack-fruit caught, I fell a prey
 to fawn-eyed maids!
Lo! Thou'st forsaken me! But if Thou
 leave, I'll utter loud reproach!
I'll call Thee 'Black-throat,' 'Who ate
 poison from the sea,' 'The Unqualified,'
'The man,' 'Crowned with the waning
 moon,' 'The mighty God gone wrong.'

---

35. உழைதரு - மான்போன்ற. ஈயின் ஒப்பாய் - ஈயைப்போல. விழைதருவேலை - விரும்புபவளை. வேலை - கடல். மழைதரு - மேகம் போன்ற; கரிய. மானிடன் - மானை இடக்கையில் ஏந்தியவன்; மனிதன். குணமிலி - முக்குணங்களையும் கடந்தவன்; குணம் இல்லாதவன். தேய்

36. உங்கையிற் பிள்ளை உனக்கே அடைக்கலம்;

எங்கெழிலென் ஞாயிறு
உங்கையிற் பிள்ளை
யுனக்கே அடைக்கலமென்(று)
அங்(கு)அப் பழஞ்சொல்
புதுக்கும்எம் அச்சத்தால்
எங்கள் பெருமான்
உனக்கொன்(று) உரைப்போம்கேள்
எங்கொங்கை நின்அன்பர்
அல்லார்தோள் சேரற்க
எங்கை உனக்கல்லா(து)
எப்பணியும் செய்யற்க
கங்குல் பகல்எங்கண்
மற்றொன்றும் காணற்க

மதியன் - பிறையை அணிந்தவன்; குறைந்த அறிவுடையவன். பழைதருமாபரன் - பழைய பெரிய மேலோன்; பழைய பெரிய ஆண்டி. பின் இரண்டடிகள் பழிப்பது போலப் புகழ் புலப்படுத்தல்.

36. உன் கையிற் பிள்ளை உனக்கே அடைக்கலம் - தாயே தன் பிள்ளையைக் காத்துக்கொள்ளுவள் ஆதலின், அவள் பிள்ளை அவளுக்கு அடைக்கலம் என்று பிறர் சொல்லுதல் மிகையாகும். அதுபோல இறைவனிடம் வேண்டுகோள் செய்தல் மிகையென்ற அச்சம் இருப்பினும் ஆசை பற்றி வேண்டுகோள் செய்வம் என்பார், இப்பழமொழியை எடுத்தியம்பினர் (க. சு.). இப்பழமொழி திருமணகாலத்தில்

இங்கிப் பரிசே
எமக்(கு)எங்கோன் நல்குதியேல்
எங்கெழிலென் ஞாயி(று)
எமக்கேலோர் எம்பாவாய். 173

— ***திருவெம்பாவை: 19***

36. The children of your hand are your refugees

'*The children of Thy hand are we;*
our Refuge Thou;'—
thus that old word we say anew;
in this our dread
Our Lord, to Thee one prayer
we make; vouchsafe to hear!
'let none but Thine own lovers
true our forms embrace;—
Our hands no service pay
save to Thyself alone;—
our eyes,—by night, by day,—
let them see nought but Thee!'

மணமகளை மணமகன் பால் ஓம்படுத்தற்பொருட்டுப் பெற்றோர் கூறும் கூற்றாகப் பண்டு வழங்கியது என்பர். மணமகன் கைப்பிடித்த ஞான்றே அவனுக்கு அப்பெண் உரியள் ஆகவும், அவளைப் பெற்றோர் தம் ஆர்வத்தால், 'சிறப்பு முறையிலும் பாதுகாக்கும் கடமை நின்பாலதே' என வற்புறுத்துக் கூறுமுகமாக எழுந்தது இப் பழமொழி (கதிர்மணி விளக்கம்). பழஞ்சொல் - பழமொழி. புதுக்கும் - புதுப்பிக்கும். கங்குல் - இரவு. பரிசே - முறையே.

Our king, if here this boon
Thou grant, to us the sun
in perfect beauty shines!—
Our Lady fair, arise!

37. தாய் அன்பு

வான்வந்த தேவர்களும்
மாலயனோ டிந்திரனும்
கானின்று வற்றியும்
புற்றெழுந்தும் காண்பரிய
தான்வந்து நாயேனைத்
தாய்போல் தலையளித்திட்(டு)
ஊன்வந்(து) உரோமங்கள்
உள்ளே உயிர்ப்பெய்து
தேன்வந்(து) அமுதின்
தெளிவின் ஒளிவந்த
வான்வந்த வார்கழலே
பாடுதுங்காண் அம்மானாய். 178

— திருவம்மானை : 4

---

37. கான்நின்று வற்றி-காட்டில் தவஞ்செய்து நின்று உடல் வற்றி. தலையளித்திட்டு - கருணை செய்து. வார்கழல் - திருவடி.

37. Mother's Love

The gods who filled the heavens,—Mal, Ayan, Indra too,
Sore penance did, like anthills stood, yet knew Him not!
To be a cur He came; with *mother love* He lent His aid;
In flesh He came, with trembling rapture thrilled me through—
Honied ambrosia's Essence pure; the jewell'd foot
That treads the skies in gleaming light sing we! Ammanay, see!

38. கல்லைப் பிசைந்து கனியாக்கல்

கல்லா மனத்துக்
கடைப்பட்ட நாயேனை
வல்லாளன் தென்னன்
பெருந்துறையான் பிச்சேற்றிக்
கல்லைப் பிசைந்து
கனியாக்கித் தன்கருணை
வெள்ளத் தழுத்தி
வினைகடிந்த வேதியனைத்

38. ஒல்லை விடையான் - விரைந்து செல்லும் இடபத்தையுடையவன்.

தில்லை நகர்புக்குச்
சிற்றம் பலமன்னும்
ஒல்லை விடையானைப்
பாடுதுங்காண் அம்மானாய். 179

— திருவம்மானை : 5

38. Making a stone a sweet fruit

The Mighty One, the South-King,
Perum-turrais Lord,
Me vilest cur, of mind untaught,
with frenzy filled ;
Kneaded the stone, made it sweet fruit ;
plunged in the flood
Of mercy ; all my sin destroyed.
To Him, the Sage
Who Tillai's city entering, in the sacred
court abides,
The ancient Rider of the Bull, sing we !
Ammanay, see !

39. நாட்டார் நகை செய்தல்

கேட்டாயோ தோழி
கிறிசெய்த வாறொருவன்
தீட்டார் மதில்புடைசூழ்
தென்னன் பெருந்துறையான்

---

39. கிறி - உய்திநெறி; மாயம். தீட்டுஆர்மதில் - சுதை தீட்டிய மதில். காட்டாதன - உண்மை ஞானங்கள்.

காட்டா தனவெல்லாம்
காட்டிச் சிவங்காட்டித்
தாட்டா மரைகாட்டித்
தன்கருணைத் தேன்காட்டி
நாட்டார் நகைசெய்ய
நாமேலை வீடெய்த
ஆட்டான்கொண் டாண்டவா
பாடுதுங்காண் அம்மானாய்.

— **திருவம்மானை : 6**

39. Rustic's laughter

And hast thou heard, my friend, how one with falsehood came ?
The Lord of Purun-turrai's southern shrine begirt
With storied walls, showed things ne'er shown before, showed bliss,
Showed us His lotus foot, and honey of his grace ;—
While rustic's laughed, — that we the heavenly home might gain, !
He made us His ; sing we this grace Ammanay, see !

ஆள்தான்கொண்டு ஆண்டவா - தான் என்னை அடிமை கொண்ட விதத்தை.

40. நாய் சிவிகை ஏற்றுவித்தல்

ஒன்றாய் முளைத்தெழுந்(து)
எத்தனையோ கவடுவிட்டு
நன்றாக வைத்தென்னை
நாய்சிவிகை ஏற்றுவித்த
என்றாதை தாதைக்கும்
எம்மனைக்கும் தம்பெருமான்
குன்றாத செல்வற்கே
சென்றூதாய் கோத்தும்பீ. 222

—திருக்கோத்தும்பீ: 8

40. Giving a lofty seat to a cur

Unique it sprang, rose up, sent forth its boughs
that none can count,—a tree of grace!
Right well He cared for me,—*a cur*,—and
called, *and caused in state aloft to ride*,
He is my Sire! To sire and house and
race mighty Peruman is He!
To Him, the Fount of bliss unfailing, go ;and
breathe His praise, thou humming-bee!

---

40. ஒன்றாய் முளைத்தெழுந்து - சிவ தத்துவமாகிய முதலில் தோன்றி. எத்தனையோகவடுவிட்டு - கலை, புவனம், தத்துவம் என்று சொல்லப்பெற்ற கிளைகளாக விரிந்து. நன்றாகவைத்து - கருவிகரணங்களோடு செவ்வையாக வைத்து. சிவிகை - பல்லக்கு. என்தாதை என்பது படைத்த அயனையும், அவன்தாதை என்பது அரியையும், எம்மனை என்பது உமையையும் குறிக்கும் என்பாருமுளர். (கா. சு.).

41. தள்ளப்பட்ட காளை; நாய் பெற்ற செல்வம்; தாயன்பு

நோயுற்று மூத்துநான்
நுந்துகன்று *யிங்கிருந்து*
நாயுற்ற செல்வம்
நயந்தறியா வண்ணமெல்லாம்
தாயுற்று *வந்தென்னை*
ஆண்டுகொண்ட தன்கருணைத்
தேயுற்ற செல்வற்கே
சென்றூதாய் கோத்தும்பீ. 224

— ***திருக்கோத்தும்பி: 10***

41. A weanling calf; the wealth that a dog got; Mother's love

Pain I endured,—grew old,—again waxed like *a * weanling calf*,—in ceaseless change;
And here I dwelt, desiring ever more *enjoyments that a dog might share*,—
In folly's every guise. *With mother-love*, He came in grace, and made me His!

---

41. நுந்து கன்று - தள்ளப்பட்ட காளை (ச. த.); (தாயினால்) தள்ளப்பட்ட கன்று (கா. சு.) தே உற்ற - ஒளிபொருந்திய.

To the rich Lord of mercy's store go thou, and breathe His praise, O humming—bee!

* Either 'a calf that leaves its mother' or 'a calf which its mother forsakes.'

42. **நாய்க்குத் தவிசு இடுதல்**

பூமே லயனோடு
மாலும் புகலரிதென்
றேமாறி நிற்க
அடியேன் இறுமாக்க
நாய்மேல் தவிசிட்டு
நன்றாய்ப் பொருட்படுத்த
தீமேனி யானுக்கே
சென்றூதாய் கோத்தும்பீ. 234

— *திருக்கோத்தும்பீ: 20*

42. **Giving a lofty seat to a cur**

Ayan, who crowns the lotus flower, and Mal
were grieved,—for He was hard to reach!
But I, His lowly slave, all jubilant
fulfilled of exultation stood!
To me, mere cur, He gave a lofty seat,
endued right well with worthiness!
To Him, Whose form is fiery flame, go thou,
and breathe His praise, O humming-bee!

---

42. நன்று - நன்றாக. பொருட்படுத்த - மதித்த.

43. கல்நார் உரித்தல்

கன்னார் உரித்தென்ன
என்னையுந்தன் கருணையினால்
பொன்னார் கழல்பணித்(து)
ஆண்டபிரான் புகழ்பாடி
மின்னேர் நுடங்கிடைச்
செந்துவர்வாய் வெண்ணகையீர்
தென்னாதென் னாவென்று
தெள்ளேணம் கொட்டாமோ. 243

— **திருத்தெள்ளேணம்: 9**

43. Peel a stone

As though *some stone were made sweet fruit,* the Lord in grace
Gave ev'n to me His golden Foot, and made me His.
O ye with slender waist, red lips, and winsome smiles!
'Lord of the Southern-Land,' call Him; and beat Tellenam!

---

43. உரித்தென்ன - உரித்தாற்போல. மின்னேர் - மின்னலைப் போன்ற. நுடங்கு - வளைந்த.

44. **நாயிற் கடைப்பட்ட; தாயிற் பெரிதும் தயா; வாயில் பொடிபோட்டு**

நாயிற் கடைப்பட்ட
நம்மையும்ஓர் பொருட்படுத்துத்
தாயிற் பெரிதும்
தயாவுடைய தம்பெருமான்
மாயப் பிறப்பறுத்து
ஆண்டான்என் வல்**வினையின்**
வாயிற் பொடியட்டிப்
பூவல்லி கொய்யாமோ. 277

—திருப்பூவல்லி: 3

44, **More vile than a dog; Mother's love; Humbled in the dust**

Us too, *than dogs more vile*, of worth and note He made to be;
With greater than *a mother's tenderness*, our Peruman
Cut off 'illusive birth,' made us His own; our 'deeds' so strong
Laid prostrate *humbled in the dust;* pluck we the lily-flowers!

---

44. தயா - கருணை. பொடியட்டி - மண்போட்டு.

45. கல் நார் உரித்தல்

பன்னாள் பரவிப்
பணிசெய்யப் பாதமலர்
என்னாகந் துன்னவைத்த
பெரியோன் எழிற்சுடராய்க்
**கன்னார் உரித்தென்னை
யாண்டுகொண்டான்** கழலிணைகள்
பொன்னான வாபாடிப்
பூவல்லி கொய்யாமோ. 283

—திருப்பூவல்லி: 9

45. Peel a stone

That I might praise Him many a day, and
service due perform,
The Mighty—One His fragrant foot-flower
on my frame impress'd;
A beauteous Light He shone, *softened
my heart*, and made me His!
Sing how those jewell'd Feet are gold, and
pluck the lily—flowers!

---

45. ஆகம் - உடம்பு; இங்குத் தலையைக் குறிக்கும். துன்ன - பொருந்த. எழில் - எழுச்சி. பொன்ஆனவா பாடி - மாறுத பயன் தந்த வகையைப்பாடி (கா. சு.)

46. பேய்த்தேர் முகக்கும் பேதை

பூத்தாரும் பொய்கைப்
புனலிதுவே எனக்கருதிப்
பேய்த்தேர் முகக்குறும்
பேதைகுணம் ஆகாமே
தீர்த்தாய் திகழ்தில்லை
அம்பலத்தே திருநடஞ்செய்
கூத்தா!உன் சேவடி
கூடும்வண்ணம் தோணுக்கம். 313

—திருத்தோணுக்கம்: 1

46. The demon car

The demon-car allures: 'a stream flowing from flowery lake,'
Men think, and rush to draw, in ignorance and folly lost!
Thou hast such fond delusions far removed, O Dancer blest
In shining Tillai's Court! As we Thy roseate Foot would reach,
Play we tonokkam!

---

46. ஆரும் - நிறைந்த. பேய்த்தேர் - கானல் நீர். முகக்குறும் - முகக்கும். திருத் தோள் நோக்கம் என்பது ஒருவர் தோளை மற்றொருவர் கடைக்கண்ணாற் பார்க்க முயன்றிடும் ஆட்டம் போன்ற தோர் மகளிர்விளையாட்டு (கா. சு.)

47. பாழுக்கு இறைத்தேன்

ஏழைத் தொழும்பனேன்
எத்தனையோ காலமெல்லாம்
பாழுக் கிறைத்தேன்
பரம்பரனைப் பணியாதே
ஊழிமுதற் சிந்தாத
நன்மணிவந் தென்பிறவித்
தாழைப் பறித்தவா
தோணோக்கம் ஆடாமோ. 325

—திருத்தோணோக்கம்: 13

47. Watering barren soil

Poor servile worshipper,—how many
many a time
I've watered barren soil,—not worshipping
the Lord Supreme!
The Eternal—First, th' imperishable
flawless Gem, to me
Came down; and bar of my 'embodiment,
destroyed; and thus
Play we tonokkam!

---

47. தொழும்பனேன் - அடியேன். பாழுக்கு இறைத்தேன் - காலத்தை வீணாகச் செலவிட்டேன். சிந்தாத - அழியாத. தாழ் - தாழ்ப்பாள்; அடிப்படை கா. சு.).

48. இரைதேர் கொக்கு ; பிரைசேர் பால்

அரைசே பொன்னம் பலத்தாடும்
அமுதே என்றுன் அருள்நோக்கி
இரைதேர் கொக்(கு)ஒத்து இரவுபகல்
ஏசற் றிருந்தே வேசற்றேன்
கரைசேர் அடியார் களிசிறப்பக்
காட்சி கொடுத்துன் அடியேன்பால்
பிரைசேர் பாலின் நெய்போலப்
பேசா திருந்தால் ஏசாரோ.

—கோயில் மூத்த திருப்பதிகம்: 5

48. Heron watching for its prey

'King, Dancer in the golden Court, Ambrosia.'—looked for Thy grace,–I cry,
Like patient heron watching for its prey, by night and day, I drooping 'bide and mourn.
Thy saints have reached the shore,—in joy they shine; to me if Thou deny that vision bright,—
Like butter hidden in the curdled milk,—still silent, will not they reproach ?

---

48. ஏசற்று - வருந்தி. வேசற்றேன் - வாடினேன். கரை - முத்திக்கரை. 'பிரை சேர்பாலின் நெய் என்றது வெளிப்பட்டும் வெளிப்படாதிருக்கும் நிலையை' ச, த.

49. ஆள்வாரிலி மாடு

இரங்கும் நமக்கம் பலக்கூத்தன்
என்றென் றேமாந் திருப்பேனை
அருங்கற் பனைகற் பித்தாண்டாய்
ஆள்வா ரிலிமாடு ஆவேனோ
நெருங்கும் அடியார் களுநீயும்
நின் று நிலாவி விளையாடும்
மருங்கே சார்ந்து வரவெங்கள்
வாழ்வே வாவென் றருளாயே. 382

—**கோயின் மூத்த திருப்பதிகம்: 7**

49. A beast with none to own

'Show pity, Dancer in the golden court,'
with ever-yearning soul I pray. Of old,
Rare teaching didst Thou give, and mad'st
me Thine! *Shall I become mere beast,*
with none to own ?
Thy saints around Thee throng, where
Thou and they, in happy sport com-
mingled, ever dwell.
That I may thither rise to join the band.
our only Bliss, in grace O bid me come!

---

49. ஏமாந்திருப்பேனை - களிப்புற்று இருப்பேனை. அருங்கற்பனை - புதிய ஏற்பாடு (கா. சு.) நிலாவி - விளங்கி.

50. சிறை பெரு நீர்

குறைவிலா நிறைவே கோதிலா அமுதே
ஈறிலாக் கொழுஞ்சுடர்க் குன்றே
மறையுமாய் மறையின் பொருளுமாய் வந்தென்
மனத்திடை மன்னிய மன்னே
சிறைபெரு நீர்போல் சிந்தைவாய்ப் பாயும்
திருப்பெருந் துறையுறை சிவனே
இறைவனே நீயென் னுடலிடங் கொண்டாய்
இனியுன்னை என்னிரக் கேனே. 390

— **கோயில் திருப்பதிகம்: 5**

50. Torrents having no bounds

Fulness, that knows no lack ; ambrosial
Essence pure !
O unscaled mount of ever-blazing light !
Thou art the Veda,—Thou the mystic
Veda's sense.
Within my mind Thou coming,
'bid'st its Lord !
As torrents burst their bounds, Thou
rushest through my soul !
Sivan, Who dwell'st in Perun-turrai's
shrine !

---

50. மறை - வேதம்; மந்திரம் (கா. சு.) மன்னிய - நிலைபெற்ற. மன்னே - அரசனே. சிறைபெருநீர் – கரை கடந்த வெள்ளம். என் இரக்கேன் - என்னயாசிப்பேன்.

O King, my body hast Thou made
Thine home ; henceforth
What blesssings shall Thy suppliant
ask of Thee ?

51. தலையினால் நடத்தல்

புலைய னேனையும் பொருளென நினைந்துன்
அருள்பு ரிந்தனை புரிதலும் களித்துத்
தலையி னால்நடந் தேன்*விடைப் பாகா !*
சங்க ரா!எண்ணில் வானவர்க் கெல்லாம்
நிலைய னே!அலை நீர்விட முண்ட
நித்த னே!அடை யார்புரம் எரித்த
சிலையனே!எனைச் செத்திடப் பணியாய்
திருப்பெ ருந்துறை மேவிய சிவனே. 398

— **செத்திலாப் பத்து: 3**

51. Trod on air

Ev'n me, the meanest one, thou didst
as thing of worth regard,
and gav'st Thy grace ; and giving
mad'st me glad.

---

51. சங்கரன் - இன்பம் செய்பவன். 'இன்பஞ்செய்தலிற்சங்கரன் எம்பிரான்' - காஞ்சிப்புராணம். நிலையனே - ஆதாரமானவனே. அடையார் - பகைவர். சிலை - வில். செத்திடப்பணியாய் - சுதந்தர ஈனமான ஆன்மாக்களுக்குச் சாவதற்கும் உரிமையின்மையால் அதற்கும் அருள் வேண்டும் என்கின்றார்' - ச. த.

I trod on air, O Rider of the Steed !—
Author of good !
To all heaven's countless hosts
the Dwelling-place !
Eternal One ! Who atest poison from
the billowy sea !
The cities of Thy foes Thou didst consume!

52. **பாவிடை யாடுகுழல்**

மாவடு வகிரன்ன கண்ணிபங்
கா! நின் மலரடிக்கே
கூவிடு வாய்கும்பிக் கேயிடு
வாய்நின் குறிப்பறியேன்
பாவிடை யாடு குழல்போல்
கரந்து பரந்ததுள்ளம்
ஆகெடு வேனுடை யாயடி
யேனுன் அடைக்கலமே. 413

— ***அடைக்கலப் பத்து: 8***

52. Thou Half of Her with beauteous eyes !
unto Thy flow'ry feet
Thou call'st me,—then dismissest me to
deepest depths ; Thy thought

---

52. வகிர் - பிளவு. கண்ணி - கண்களையுடைய உமை. கும்பி - ஒருநரகம். பாவிடையாடு குழல் போல - நூலிழைப்பரப்பிலே அங்குமிங்கும் ஓடித்திரிகின்ற குழல் போல.

I know not. *Like pipes changing tones*
now sinks, now swells my soul.
Alas! I perish quite! Master! I Thee my
refuge make!

53. புளியம்பழம் ஒத்திருத்தல்

அளிபுண் ணகத்துப் புறந்தோல் மூடி
அடியே னுடையாக்கை
புளியம் பழமொத் திருந்தேன் இருந்தும்
விடையாய் பொடியாடீ
எளிவந் தென்னை யாண்டு கொண்ட
என்னா ரமுதேயோ
அளியே னென்ன ஆசைப் பட்டேன்
கண்டாய் அம்மானே. 420

— ஆசைப் பத்து: 5

53. Like skin - covered sores

Within this frame is loathsome; and without *skin-covered sores*,
Sore grief! Thou Rider on the Bull
Bedeckt with ashes white,

---

53. புளியம் பழம் ஓட்டோடு பொருந்தாது நிற்கும் அதுபோல் ஞானிகள் உலகப்பற்று அற்று இருப்பர். மாணிக்கவாசகரும் அங்ஙனமே இருந்தனர். நான் தொடர்பு அற்று இருந்தாலும் உலகப்பற்றினை அறவே விடமாட்டாமையால் நான் இரங்கத்தக்கவன் என்கிறார். அளியேன் - இரங்கத்தக்கவன். பொடி - விபூதி.

Stooping to me, Thou cam'st and mad'st
me Thine; Ambrosia rare!
For word of tenderness. Behold, O Sire,
my soul hath yearn'd!

54. **நுகமின்றி விளாவடித்தல்**

நீக்கி முன்னெனைத் தன்னொடு நிலாவகை
குரம்பையிற் புகப்பெய்து
நோக்கி நுண்ணிய நொடியன சொற்செய்து
நுகமின்றி விளாக்கைத்துத்
தூக்கி முன்செய்த பொய்யறத் துகளறுத்
தெழுதரு சுடர்ச்சோதி
ஆக்கி யாண்டுதன் அடியரிற் கூட்டிய
அதிசயங் கண்டாமே. 433

—***அதிசயப்பத்து: 8***

54. **Brake off the Yoke and till the soil**

Erewhile, that I no more might 'bide with
Him,He sent, and plac'd me in this cell.
He look'd on me, spake gentlest words of
mystery; *brake off the Yoke*; His hand
Upraised, made former falseness cease,
removed all fault, filled me with
gleaming light:

---

54. நிலா - நில்லாத. குரம்பை-உடல். புகப்பெய்து-புகுத்தி. நுண்ணிய நொடியன் சொல் செய்து- நுட்பமானதும், கைந்நொடிப் பொழுதில் சொல்லப்படுவதுமாகிய பிரணவப்பொருளை உபதேசித்து. விளாக்கைத்து-உழுது; கலக்கச் செய்து. பொய்-பயனற்ற செயல்கள். துகள் - குற்றம்.

'T was thus He made me His and join'd
me to His saints:
such wonder have we seen!

55. நாயினும் கடையேன்

பிட்டு நேர்பட மண்சு மந்த
பெருந்து றைப்பெரும் பித்தனே
சட்ட நேர்பட வந்தி லாத
சழக்க னேன்உனைச் சார்ந்திலேன்
சிட்ட னேசிவ லோக னேசிறு
நாயி னுங்கடை யாயவெங்
கட்ட னேனையும் ஆட்கொள் வான்வந்து
காட்டி னாய்கழுக் குன்றிலே. 467

—*திருக்கழுக்குன்றப்பதிகம்: 2*

55. Lower than the meanest cur

Thou who for hire of cakes didst carry earth!
Thou madman great, of the great
haven's shrine!
While I, who knew no law of right, to Thee,
through ignorant delusion drew not near,
O Best of Beings, Lord of Siva-world,
me, *lower than the meanest cur*, a man

---

55. சட்டம் - உடல்; கட்டனை. சிட்டன் - சீலமுடையவன். சழக்கன் - குற்றமுடையவன். கட்டனேன் - துன்பமுடையவன்.

Of evils sore, Thou cam'st to make Thine own, and show'dst Thyself upon theEagle's Hill.

56. **கடைப்பட்ட நாயேன்**

கல்லாத புல்லறிவிற்
கடைப்பட்ட நாயேனை
வல்லாள னய்வந்து
வனப்பெய்தி இருக்கும்வண்ணம்
பல்லோருங் காணவென்றன்
பசுபாசம் அறுத்தானை
எல்லோரும் இறைஞ்சுதில்லை
அம்பலத்தே கண்டேனே. 476

—கண்டபத்து: 4

56. **The very lowest cur**

To me, untaught, most ignorant, the very lowest cur,
In mighty grace He came, with heavenly beauty to clothe,
And loosed my 'servile bonds of sense' in sight of many men;
His form I've seen in Tillais' temple court, where all bow down!

---

56. வல்லாளன் - வல்லமையுடையவன். வனப்பு - அழகு. பசு - பசுத்தன்மை. பாசம் - ஆணவம் முதலியன.

57. தோளாச் சுரை

மானேர் பங்கா வந்திப்பார்
  மதுரக் கனியே மனநெகா
நானேர் **தோளாச் சுரை**யொத்தால்
  நம்பி யித்தால் வாழ்ந்தாயே
ஊனே புகுந்த உனையுணர்ந்தே
  உருகிப் பெருகும் உள்ளத்தைக்
கோனே யருளும் காலந்தான்
  கொடியேற் கென்றோ கூடுவதே. 492

— பிரார்த்தனைப் பத்து: 10

57. Unbored gourd

Thou Partner sole of the Gazelle! Sweet
  fruit to them that worship Thee!
Teacher! If I am like an *unbor'd gourd*,
  doth thus Thy glory live?
O King, when comes the time that Thou
  wilt will grant in grace to me
A soul that melts and swells in knowing
  Thee, Who cam'st in flesh?

---

57. மான் - மான்போன்ற உமை. வந்திப்பார் - வணங்குவார். தோளாச்சுரை - தொளை செய்யப்படாத சுரைக் குடுக்கை. ஊனே புகுந்த - என் உடலிடம் கொண்ட; மனிதவடிவ மெடுத்துவந்த.

58. நாய்க்குத் தவிசு இடுதல்

நானொரடி யணைவானொரு
நாய்க்குத்தவி சிட்டிங்
கூனுருடல் புகுந்தானுயிர்
கலந்தானுளம் பிரியான்
தேனார்சடை முடியான்மன்னு
திருப்பெருந்துறை யுறைவான்
வானோர்களும் அறியாததோர்
வளமீந்தனன் எனக்கே. 505

— உயிருண்ணிப் பத்து: 2

58. A throne to a cur

And who am I would reach His foot ?
To me, *mere cur, a throne*
He gave ; enter'd my flesh ; mixed
with my life ; leaves not my soul.
With crown of honey-dripping-locks, blest
Peruntural's Lord
On me a gracious boon bestow'd,
that heavenly ones know not !

---

58. அணைவான் - அடைதற் பொருட்டு. தேன்ஆர் - வண்டு பொருந்திய.

59. அடவி மரம்

வான்பாவிய உலகத்தவர்
 தவமேசெய அவமே
ஊன்பாவிய உடலைச்சுமந்து
 அடவிமரம் ஆனேன்
தேன்பாய்மலர்க் கொன்றைமன்னு
 திருப்பெருந்துறை யுறைவாய்
நான்பாவியன் ஆனல்உனை
 நல்காய்என லாமே. 513

— உயிருண்ணிப் பத்து: 10

59. Forest tree

While dwellers in the heavenly world do
 holy deeds, in vain
Bearing a frame of flesh compact, I stand
 like forest tree.
Thou dwell'st in Perun-turrai's shrine,
 where honey-dripping cassia blooms;
Though I'm a sinner, yet I may implore,
 ' give grace to me ! '

---

59. வான்பாவிய உலகத்தவர் - தேவர். அவமே - வீணுக. அடவி மரம் ஆனேன் - காட்டிலுள்ள மரம் போலப் பயன் அற்றவன் ஆனேன். நல்காய்- அருள்கொடுப்பாய். எனல் ஆமே - என்று வேண்டலாம் அல்லவா ?

60. பால் நினைந்தூட்டும் தாய்

பானினைந் தூட்டுந் தாயினும் சாலப்
பரிந்துநீ பாவியே னுடைய
ஊனினை யுருக்கி உள்ளொளி பெருக்கி
உலப்பிலா ஆனந்த மாய
தேனினைச் சொரிந்து புறம்புறம் திரிந்த
செல்வமே! சிவபெரு மானே!
யானுனைத் தொடர்ந்து **சிக்கெனப் பிடித்தேன்**
எங்கெழுந் தருளுவ தினியே. 542

— **பிடித்த பத்து: 9**

60. **Mother's thoughtful care her infant feeds**

The mother's thoughtful care her infant feeds: Thou deign'st with greater love to visit sinful me,–
Melting my flesh, flooding my soul with inward light, unfailing rapture's honied sweetness Thou
Bestowest,—through my every part infusing joy! My Wealth of bliss! O Siva-Peruman!
Close following Thee–I've seized, and hold Thee fast! Henceforth, Ah, whither grace imparting would'st Thou rise?

---

60. சாலப்பரிந்து - மிகவும் இரங்கி. உலப்புஇலா - அழிவில்லாத. புறம்புறம் திரிந்த - சென்றவிடம் எல்லாம் உடன் திரிந்த. சிக்கென - உறுதியாக.

61. இரும்பு மனம்

இரும்புதரு மனத்தேனை
    ஈர்த்தீர்த்தென் என்புருக்கிக்
கரும்புதரு சுவையெனக்குக்
    காட்டினை உன்கழலிணைகள்
ஒருங்குதிரை யுலவுசடை
    யுடையானே நரிகளெல்லாம்
பெருங்குதிரை யாக்கியவா(று)
    அன்றேயுன் பேரருளே. 544

—திருவேசறவு: 1

61. Iron mind

My iron mind full often did'st Thou draw,
    and melt my frame;
Thy feet to me didst show, as though the
    sweet cane's pleasantness;
Thou of the braided lock, where waters
    wander wave on wave!
The jackals all thou mad'st great horses;
    thus didst show Thy grace.

---

61. திரை - அலை. இரும்பின் தன்மை, எளிதில் உரு காமை.

62. நாய்க்குப் பொற்றவிசு இடுதல்

கற்றறியேன் கலைஞானம்
கசிந்துருகேன் ஆயிடினும்
மற்றறியேன் பிறதெய்வம்
வாக்கியலால் வார்கழல்வந்
துற்றிறுமாந் திருந்தேனெம்
பெருமானே அடியேற்குப்
பொற்றவிசு நாய்க்கிடுமா
றன்றேநின் பொன்னருளே. 548

—**திருவேசறவு: 5**

62. Giving a cur a golden seat

No lore of wisdom had I, melted not in rapturous tears ;
Yet other gods knew not! And by Thy word, our mighty Lord!
My soul exulted when I gained Thy foot. To me, Thy slave,
As though *one gave to cur a golden seat,* Thy grace was shown.

---

62. வாக்கு இயலால் - திருவாக்கின் தன்மையால் ; உபதேச மொழியால். இறுமாந்து - செருக்கடைந்து.

63. கற்றாவின் மனம்

உற்றாரை யான்வேண்டேன்
ஊர்வேண்டேன் பேர்வேண்டேன்
கற்றாரை யான்வேண்டேன்
கற்பனவும் இனியமையும்
குற்றாலத் தமர்ந்துறையும்
கூத்தாவுன் குரைகழற்கே
கற்றாவின் மனம்போலக்
கசிந்துருக வேண்டுவனே. 556

—திருப்புலம்பல்: 3

63. Cow yearning for its calf

Nor friends, nor kin I seek ; no city
I desire ; no name I crave ;
No learned ones I seek ; and henceforth
lessons to be conned suffice.
Thou dancer, in Kuttalam dwelling blissful,
Thy resounding feet
I'll seek, that as the *cow yearns for its calf*,
my longing soul may melt.

---

63. கற்றாரை - திருவடி ஞானம் பெறாத கல்வியறிவு உடையவரை. கற்றா - கன்றையுடைய பசு.

64. பாழ் நிலத்தை உழுதல் ; கீழ்ச்செய் தவத்தால் கிழி பெறல்

பாழ்ச்செய் விளாவிப்
பயனிலியாய்க் கிடப்பேற்குக்
கீழ்ச்செய் தவத்தால்
கிழியீடு நேர்பட்டுத்
தாட்செய்ய தாமரைச்
சைவனுக்கென் புன்றலையால்
ஆட்செய் குலாத்தில்லை
யாண்டானைக் கொண்டன்றே. 565

— குலாப்பத்து: 9

64, **Tilling a barren field ; the gain of penance done old accrued**

I lay *as one who tills a barren field and reaps no crop* ;—
'Twas then *the gain of penance done of old accrued* ; and thus
Before the Saivan's roseate lotus foot
I bent my worthless head
His own,—I've reached Him Who bears rule in Tillai's home of joy !

---

64. செய் - வயல். விளாவி - உழுது. கீழ்ச்செய் - முற்பிறப்பிற் செய்த. கிழியீடு - பொற்கிழி. செய்ய - சிவந்த. தாள் - திருவடி. சைவன் - சிவபெருமான். கொண்டன்றே - கொண்டேன்.

65. கன்றை நினைந்தெழு தாய்

ஒன்றினொ டொன்றுமோர் ஐந்தினொ டைந்தும்
உயிர்ப்பறு மாகாதே
உன்னடி யாரடி யாரடி யோமென
உய்ந்தன வாகாதே
கன்றை நினைந்தெழு தாயென வந்த
கணக்கது வாகாதே
காரண மாகும னாதி குணங்கள்
கருத்துறு மாகாதே
நன்றிது தீதென வந்த நடுக்கம்
நடந்தன வாகாதே
நாமுமே லாமடி யாருட னேசெல
நண்ணுது மாகாதே
என்றுமெ னன்பு நிறைந்த பராவமு
தெய்துவ தாகாதே
ஏறுடை யானெனை யாளுடை நாயகன்
என்னுள் புகுந்திடிலே. 634

— **திருப்படையாட்சி: 2**

---

65. **ஒன்றினொடொன்று** - உயிரோடு பொருந்திய உடல். **ஐந்தினொடைந்தும்** - ஐம்பொறிகளோடு அவற்றிற்குரிய ஐம்புலன்கள். **உயிர்ப்பறும்** - கலந்து இயங்குவது அறும். **பராவமுது** - மேலான அமுதமானவன் (கா. சு.); தோத்திரிக்கப்படுகின்ற அமுதை யொத்தவன் (ச. த.)

65. Mother thinking and hastening to her child

One with one, and five with five,—
the life shall last ;—shall it not be ?
Thy servants' servants' servants made,
we shall be free ;—shall it not be ?
The *Mother thinks on her young, and rising*
hastes; so shall He come;-shall it not be?
The casual qualities that no beginning own
shall fill the thought; shall it not be ?
At 'this is good,' and 'this is ill,' no more
shall trembling shake; shall it not be ?
We too to join Thy saints above shall
onward pass ;—shall it not be !
Th' Ambrosia supreme that fills my loving
thought we then shall gain ;—shall it
not be,
If the bull's Lord, my Master, Whose I am,
within my soul shall entering come ?

66. நாய் சிவிகை ஏற்றுவித்தல்

செம்மைநலம் அறியாத
சிதடரொடும் திரிவேனை
மும்மைமலம் அறுவித்து
முதலாய முதல்வன்றான்

---

66. செம்மைநலம் - வீட்டின்பம் (ச. த.) சிதடர் - மூடர். மும்மைமலம் - ஆணவம், மாயை, கன்மம். அம்மை - தாய்போல்வான் (கா. சு.)

நம்மையுமோர் பொருளாக்கி
நாய்சிவிகை ஏற்றுவித்த
அம்மையெனக் கருளியவா
றார்பெறுவார் அச்சோவே. 656

—**அச்சோப் பதிகம்: 9**

66. A royal seat to a dog

With those that Know not right or good,-
men ignorant,—I wandered too.
The first, the Primal Lord Himself three-
fold pollution caused to cease;
Even me He took as something worth,—
like dog in sumptuous litter borne!
'Twas thus the Mother gave me grace:
O rapture! who so blest as I?

திருச்சிற்றம்பலம்

—oo—

உ

சிவ சிவ

ஸ்ரீ மாணிக்கவாசக சுவாமிகள்

துதி

—o—

எழுதரு மறைகள் தேறு
    இறைவனை எல்லிற் கங்குல்
பொழுதறு காலத்து என்றும்
    பூசனை விடாது செய்து
தொழுதகை தலைமே லேறத்
    துளும்புகண் ணீருள் மூழ்கி
அழுதடி அடைந்த அன்பன்
    அடியவர்க்கு அடிமை செய்வாம்.

— **திருவிளையாடற் புராணம்.**

உ

சிவ சிவ

திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடத்துத் தலைவர்
ஸ்ரீ-ல-ஸ்ரீ காசிவாசி அருள்நந்தித் தம்பிரான் சுவாமிகள்
அவர்கள் நிறுவிய தருமங்கள்

—o—

எண்	தரும விவரம்			மூலதனம்
				ரூபாய்
I	திருமுறை வளர்ச்சிக்காக	22	தருமங்கள்	2,07,000
II	கல்வி அபிவிருத்திக்காக	39	௸	5,39,000
III	சைவசித்தாந்தம் பரப்ப	7	௸	1,56,000
IV	அன்னதானம் செய்ய	53	௸	15,09,000
V	வைத்தியம் செய்ய	3	௸	1,14,500
VI	பொது தருமம்-ஸ்நான கட்டம், அகதி நன்கொடை, தண்ணீர்ப் பந்தர், ஒளி வளர் விளக்கு முதலிய	27	தருமங்கள்	2,05,345
	ஆகத் தருமங்கள் 150-க்கு			27,30,845

திருச்சினுப்பள்ளி யுனைடெட் பிரிண்டர்ஸ் லிமிடெட்.

		ரூ.	அ.
23	கந்தர் கலிவெண்பா - மூலம் மட்டும்...	0	1
24	நீதிநெறி விளக்கம்—ஆங்கிலம், ஹிந்தி...	0	8
25	சகலகலா வல்லி மாலை - ஆங்கிலமும் ஹிந்தியும் கூடியது ...	0	1
26	சிவஞான சித்தியார் - ஆங்கிலமும் ஹிந்தியும் கூடியது ...	5	0
27	திருக்குறள் - அறத்துப்பால் - ஹிந்தி மொழிபெயர்ப்பு ...	1	8
28	௸ பொருட்பால் ௸ ௸ ...	2	8
29	௸ காமத்துப்பால் ௸ ௸. ...	1	0
	௸ மூன்று புத்தகங்களும் சேர்த்து ...	4	0
30	முதுமொழிமேல் வைப்பு - ஸ்ரீ வெள்ளியம்பலவாணத் தம்பிரான் சுவாமிகள்	0	7
31	திருவாரூர் நான்மணி மாலை - முத்துக்குமாரசுவாமி பிள்ளைத் தமிழ் ...	1	4
32	சிதம்பர மும்மணிக்கோவை - சிதம்பர செய்யுட்கோவை - தில்லைச் சிவகாமியம்மை இரட்டைமணி மாலை	1	0
33	பண்டார மும்மணிக் கோவை - காசிக் கலம்பகம் - சகலகலாவல்லி மாலை ...	1	0
34	தமிழிசைப் பாக்கள் ...	0	8
35	திருக்குறள் - பொருட்பால் - பரிமேலழகர் உரை - இலக்கணக் குறிப்பு விளக்கம் ...	0	2

கிடைக்குமிடங்கள் :

1. **ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் கலைக்கோயில், ஸ்ரீவைகுண்டம்**
2. **தியாகராச விலாஸ், திருவல்லிக்கேணி, சென்னை.**

குறிப்பு: ௸ விற்பனைத் தொகை 'குமரகுருபரன்' பத்திரிகையைச் சாரும்.

உ

"குமர குருபரன்"

[தமிழ்த் திங்கள் வெளியீடு]

ஸ்ரீ வைகுண்டம்

ஸ்ரீகுமரகுருபர சுவாமிகள் மடாலயத்திலிருந்து

விரோதி ஆண்டு தை மாதம் முதல்

மாதந்தோறும் வெளிவருகிறது

*

இது

சைவசித்தாந்தம், ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் பிரபந்தம், பன்னிரு திருமுறை ஆராய்ச்சி, இலக்கியம், பிறமொழிகள், கலாசாரம் சம்பந்தமான கட்டுரைகள் கொண்டது

*

T. M. குமரகுருபரன் பிள்ளை B. A., B. L.,

நிர்வாக ஆசிரியர் '**குமரகுருபரன்**'

மானேஜிங் டிரஸ்டி, ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் மடம்

(நிரந்தரத் தலைவர், குமரகுருபரன் சங்கம்)

ஸ்ரீவைகுண்டம்

வருட சந்தா ரூ. 1-8-0 தனிப்பிரதி ரூ. 0-2-0

திருச்சிராப்பள்ளி யுனைடெட் பிரிண்டர்ஸ் லிமிடெட், திருச்சி